தீபம்...



கோவில்பாளையம் அருகேயுள்ள காலிங்கராயன் குளத்தில் கௌசிகா நீர்க்கரங்கள் மற்றும் காலிங்கராயன் குளம் பாதுகாப்பு அமைப்பின் தன்னார்வலர்கள் சார்பில் வியாழக்கிழமை ஏற்றப்பட்ட கார்த்திகை தீபங்கள்.

ஈஷா யோக மையத்தில்...



கார்த்திகை தீபத் திருநாளையொட்டி, கோவை ஈஷா யோக மையத்தில் தியான லிங்கம், லிங்க பைரவி, சூர்யகுண்ட மண்டபம், ஆதியோகி வளாகங்களில் வியாழக்கிழமை ஏற்றப்பட்ட விளக்குகள்.

கோவையில் இருந்து இயக்கப்படும் 6 விமானங்கள் சேவை ரத்து

கோவை, டிச. 4: கோவையில் இருந்து சென்னை, பெங்களூரு, ஹைதராபாத், மும்பை ஆகிய பகுதிகளுக்கு இண்டிகோ நிறுவனத்தின் சார்பில் இயக்கப்படும் 6 விமானங்கள் வியாழக்கிழமை ரத்து செய்யப்பட்டன.

கோவை சர்வதேச விமான நிலையத்திலிருந்து சென்னை, மும்பை, புதுதில்லி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கும், சிங்கப்பூர், ஷார்ஜா போன்ற சர்வதேச நகரங்களுக்கும் விமானங்கள் இயக்கப்படுகின்றன.

இந்நிலையில், கோவையில் இருந்து சென்னைக்கு இண்டிகோ நிறுவனம் சார்பில் இயக்கப்படும் 3 விமானங்கள், ஹைதராபாத், பெங்களூரு, மும்பை ஆகிய நகரங்களுக்கு இயக்கப்படும் 3 விமானங்கள் என மொத்தம் 6 விமானங்கள் வியாழக்கிழமை ரத்து செய்யப்பட்டன.

நிர்வாக ரீதியிலான காரணங்களால் இந்த சேவை ரத்து செய்யப்பட்டுள்ளதாக விமான நிறுவனம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேபோல, கோவையில் இருந்து சென்னை உள்ளிட்ட பெருநகரங்களுக்கு இயக்கப்படும் 4 விமானங்களின் சேவை கடந்த புதன்கிழமை ரத்து செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இன்றைய மின்தடை: கள்ளிமடை, கதிர்நாயக்கன்பாளையம்

கோவை, டிச. 4: கோவை கள்ளிமடை, கதிர்நாயக்கன்பாளையம் ஆகிய துணை மின் நிலையங்களில் பராமரிப்புப் பணிகள் நடைபெற உள்ளதால் வெள்ளிக்கிழமை (டிசம்பர் 5) காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை கீழ்க்கண்ட பகுதிகளில் மின் விநியோகம் இருக்காது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கள்ளிமடை: காமராஜ் சாலை,பாலன் நகர்,சர்க்கரை செட்டியார் நகர், ஹோப் காலேஜ் முதல் விமான நிலையம் வரை, வி.ஆர்.புரம், என்.கே.பாளையம், கிருஷ்ணாபுரம், ஹவுஸிங் யூனிட், சிங்காநல்லூர், ஒண்டிப்புதூர், ஜி.வி.ரெசிடென்சி, மசக்காளிபாளையம், உப்பிலிபாளையம்.

கதிர்நாயக்கன்பாளையம்: ராக்கிபாளையம், குமாரபுரம், நரசிம்மநாயக்கன்பாளையம், பாம்பே நகர், டீச்சர்ஸ் காலனி, கணேஷ் நகர், ஸ்ரீராம் நகர், தொப்பம்பட்டி.

ஆட்சியர் அலுவலகத்துக்கு 12-ஆவது முறையாக வெடிகுண்டு மிரட்டல்

கோவை. டிச.4: கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு 12-ஆவது முறையாக வியாழக்கிழமையும் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது.

கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு மின்னஞ்சல் மூலமாக வியாழக்கிழமை வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது.

இது குறித்து ரேஸ்கோர்ஸ் போலீஸாருக்கு அலுவலக ஊழியர்கள் தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்துக்கு வெடிகுண்டு செயலிழப்பு நிபுணர்கள், மோப்ப நாயுடன் வந்த போலீஸார் அலுவலகத்தின் பல்வேறு பிரிவுகளில் ஆய்வு செய்தனர். வாகன நிறுத்துமிடங்கள், பூங்கா பகுதிகள், கேண்டீன் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆய்வு செய்தும் வெடிகுண்டு ஏதும் கைப்பற்றப்படவில்லை. இதையடுத்து, வெடிகுண்டு மிரட்டல் புரளி என்பது தெரிய வந்தது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு கடந்த சில மாதங்களில் மட்டும் 11 முறை வெடிகுண்டு மிரட்டல் வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

கோவையில் ஃபேஷன் கண்காட்சி இன்று தொடக்கம்

கோவை, டிச. 4: கோவையில் 'ஃபேஷனிஸ்டா' என்ற பெயரில் ஃபேஷன் பொருள்கள் கண்காட்சி டிசம்பர் 5, 6-ஆம் தேதிகளில் நடைபெறுகிறது.

கோவை தாஜ் விவாந்தா ஹோட்டலில் இரண்டு நாள்களும் காலை 11 மணி முதல் இரவு 9 மணி வரை நடைபெறும் இக்கண்காட்சியில் புது தில்லி, மும்பை, ஹைதராபாத், சென்னை உள்ளிட்ட பல்வேறு நகரங்களைச் சேர்ந்த 40-க்கும் மேற்பட்ட வடிவமைப்பாளர்கள் பங்கேற்று, தங்களது படைப்பாற்றலை வெளிப்படுத்த உள்ளனர்.

இதில், பலவகையான புடவைகள், ஆடைகள், நகைகள், அழகு சாதனப் பொருள்கள், வீட்டு அலங்காரப் பொருள்கள், பரிசுப் பொருள்கள் உள்ளிட்டவை இடம்பெறுகின்றன.

பெருநகரங்களுக்கும், இரண்டாம் நிலை நகரங்களுக்கும் இடையே உள்ள ஃபேஷன் இடைவெளியைக் குறைக்கும் நோக்கில் இந்தக் கண்காட்சி நடத்தப்படுவதாக அதன் ஒருங்கிணைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வெளிநாட்டில் வேலை வாங்கி தருவதாக ரூ.3.50 லட்சம் மோசடி: ஒருவர் கைது



அருண்.

கோவை. டிச.4: வெளிநாட்டில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி இளைஞரிடம் ரூ.3.50 லட்சம் மோசடி செய்த நபரை போலீஸார் கைது செய்தனர்.

கோவை, சின்னவேடம்பட்டியைச் சேர்ந்தவர் டேனியல் மகன் ஜேம்ஸ் (25). இவருக்கு ஈரோடு மாவட்டம், மோலபாளையம் அருகேயுள்ள சின்ன செட்டிபாளையத்தைச் சேர்ந்த அருண் (42) என்பவர் அறிமுகமாகியுள்ளார்.

ஆஸ்திரேலிய நாட்டில் ஹோட்டல் மேனேஜ்மென்ட் தொடர்பான வேலை காலியாக இருப்பதாகவும், தனக்குத் தெரிந்தவர் மூலம் அந்த வேலையை அவருக்கு வாங்கித் தருகிறேன் என்றும் ஜேம்ஸிடம் அருண் கூறியுள்ளார்.

மேலும், நுழைவு இசைவு (விசா) உள்ளிட்ட பணிகளுக்கு ரூ.3.50 லட்சம் செலவாகும் என்றும் கூறியுள்ளார்.

இதை நம்பிய ஜேம்ஸ் ரூ.3.50 லட்சம் ரொக்கத்தை அருணிடம் கொடுத்துள்ளார். பணத்தைப் பெற்றுக் கொண்ட அவர் வேலை வாங்கித் தராமல் காலம் தாழ்த்தி வந்துள்ளார்.

தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த ஜேம்ஸ் இது குறித்து கோவை மாநகர இணையதள குற்றத் தடுப்புப் பிரிவு போலீஸில் புகார் அளித்தார்.

வழக்குப் பதிவு செய்த போலீஸார், அருணைக் கைது செய்தனர். இவர் மீது சேலம், திருச்சி ஆகிய இடங்களில் வழக்குகள் உள்ளதாக போலீஸார் தெரிவித்துள்ளனர்.

அரசு ஊழியர்கள் சாலை மறியல்: 135 பேர் கைது



மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் சாலை மறியலில் ஈடுபட்ட அரசு ஊழியர்கள்.

கோவை,டிச.4: பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கோவையில் சாலை மறியலில் ஈடுபட்ட அரசு ஊழியர்கள் 135 பேரை போலீஸார் வியாழக்கிழமை கைது செய்தனர்.

கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சங்கம் சார்பில் நடைபெற்ற இந்த மறியலுக்கு சங்கத்தின் மாவட்டத் தலைவர் ஜெகநாதன் தலைமை வகித்தார்.

இதில், பங்கேற்ற அரசு ஊழியர்கள் கூறியதாவது: பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும். சத்துணவு ஊழியர்கள், அங்கன்வாடி ஊழியர்கள், வருவாய் கிராம ஊழியர்கள், ஊர்ப்புற நூலகர்கள் உள்ளிட்ட சிறப்பு கால முறை தொகுப்பூதியம், மதிப்பூதியத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு ஊதியம் மற்றும் சட்டபூர்வ ஓய்வூதியம் வழங்க வேண்டும்.

நெடுஞ்சாலைத் துறையில் பணியாற்றும் சாலைப் பணியாளர்களின் 41 மாத பணி நீக்க காலத்தை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்படி பணிக் காலமாக முறைப்படுத்த வேண்டும். மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊரக வளர்ச்சித் துறையில் ஊராட்சி செயலர்கள் ஆகியோரை அரசு ஊழியர்களாக்க வேண்டும். பெண் அரசு ஊழியர்களுக்கு சிறப்பு சலுகைகளை அமல்படுத்த வேண்டும் என்றனர்.

இதையடுத்து, சாலை மறியலில் ஈடுபட்ட 35 பெண்கள் உள்பட 135 பேரை கைது செய்த ரேஸ்கோர்ஸ் போலீஸார், அவர்களை திருமண மண்டபத்தில் தங்கவைத்து இரவு விடுவித்தனர்.

புதுமைப் பெண் திட்டம்: மாவட்டத்தில் 70,648 மாணவிகள் பயன்

கோவை, டிச.4: கோவை மாவட்டத்தில் புதுமைப் பெண் திட்டத்தின்கீழ் கடந்த நான்கரை ஆண்டுகளில் 70,648 மாணவிகள் பயனடைந்துள்ளனர்.

தமிழகத்தில் உள்ள அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவிகளின் உயர்கல்வி சேர்க்கையை அதிகரிக்கும் வகையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டத்தின் கீழ் புதுமைப் பெண் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் அரசுப் பள்ளிகளில் 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை படித்து முடித்து உயர்கல்வியில் சேரும் மாணவிகளுக்கும், சான்றிதழ் படிப்பு, பட்டயப் படிப்பு, பட்டப் படிப்பு, தொழில்கல்வி படிக்கும் மாணவிகளுக்கும் மாதந்தோறும் ரூ.1,000 அவர்களது வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்பட்டு வருகிறது.

கோவை மாவட்டத்தில் இந்தத் திட்டத்தின்கீழ் கடந்த நான்கரை ஆண்டுகளில் 70,648 மாணவிகள் பயனடைந்துள்ளனர். அதேபோல, மாணவர்களுக்கான தமிழ்ப் புதல்வன் திட்டத்தின்கீழ் 56,430 மாணவர்கள் பயனடைந்துள்ளனர் என மாவட்ட ஆட்சியர் பவன்குமார் க.கிரியப்பனவர் தெரிவித்துள்ளார்.

வால்பாறை கல்லூரி மைதானத்தில் அரசு அலுவலகங்கள் கட்ட எதிர்ப்பு

வால்பாறை, டிச.4: வால்பாறை அரசுக் கல்லூரி மைதானத்தில் அரசு அலுவலகங்கள் கட்ட எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மாவட்ட ஆட்சியர் பவன்குமார் க.கிரியப்பனவருக்கு, வால்பாறை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) செயலர் பி.பரமசிவம் அனுப்பியுள்ள மனுவில் கூறியிருப்பதாவது: கோவை மாவட்டம், வால்பாறை அரசுக் கல்லூரி மைதானத்தில் அரசு அலுவலகங்கள் கட்டுமானப் பணி தொடங்குவதாகத் தெரிகிறது.

மைதானத்தில் அரசு அலுவலகங்கள் கட்டப்பட்டால் மாணவர்கள் விளையாடுவதற்கு இடம் இல்லாமல்போய்விடும். ஆகவே, மாணவர்கள் மற்றும் விளையாட்டு வீரர்களின் நலனைக் கருத்தில் கொண்டு அரசு அலுவலகங்கள் கட்ட அனுமதி அளிக்கக்கூடாது.

அதேவேளையில், வால்பாறையில் அரசு நிலங்களைத் தவிர தனியார் நிறுவனங்களின் பயன்பாட்டில் குறைந்த ஒப்பந்தத் தொகைக்கு அரசு பல ஏக்கர் நிலங்களை வழங்கியுள்ளது. அந்த நிலங்களை தேவைக்கு ஏற்ப கையகப்படுத்தி அரசு அலுவலகங்கள் கட்டி பயன்படுத்திக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்ணீர் அஞ்சலி



M. சரவணன்

03.12.1939 - 04.12.2025

ஏவிஎம்

குடும்பத்தினர் & தொழிலாளர்கள்

AVM STUDIOS AVM PRODUCTIONS

அறிவிப்பு

M/s. சி. ஆர். ஐ. பம்ப்ஸ் பிரைவேட் லிமிடெட்-ஹைப்ரஸ் ஃபவுண்டரிஸ். நி. எண். 818/1A, 818/2A, 818/2B1, 822, 823, 824/1A2, 824/1 B, 824/1C, வெள்ளமடை கிராமம், அன்னூர் தாலுக்கா, கோவை மாவட்டம், தற்போதுள்ள தொழில்துறை கொட்டகையின் விரிவாக்கத்திற்கு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் (SEIAA), சுற்றுச்சூழல் சான்றிதழ் (Vide File No. 12142 தேதி 25.11.2025) வழங்கியுள்ளது. மேலும் இந்த சுற்றுச்சூழல் சான்றிதழின் நகல், மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் இணையத்தளத்தில் **parivesh.nic.in** உள்ளது.

தமிழ்நாடு அரசு நிதித் துறை, சென்னை -9

தமிழ்நாடு அரசின் 7.09% சதவீத மறுவெளியீடு பிணையப் பத்திரம் 2032, தமிழ்நாடு அரசின் 7.18% சதவீத மறுவெளியீடு பிணையப் பத்திரம் 2033, தமிழ்நாடு அரசின் 7.20% சதவீத மறுவெளியீடு பிணையப் பத்திரம் 2035 மற்றும் தமிழ்நாடு அரசின் 7.18% சதவீத மறுவெளியீடு பிணையப் பத்திரம் 2036 ஏலத்தின் மூலம் விற்பனை செய்தல்

1. தமிழ்நாடு அரசு மொத்தம் ரூ.4000 கோடி மதிப்பில் ரூ.1000 கோடி மதிப்புள்ள 7.09 சதவீத தமிழ்நாடு அரசு பிணையப் பத்திரங்கள் 2032 மறுவெளியீடு, ரூ.1000 கோடி மதிப்புள்ள 7.18% சதவீத தமிழ்நாடு அரசு பிணையப் பத்திரங்கள் 2033 மறுவெளியீடு, ரூ.1000 கோடி மதிப்புள்ள 7.20% சதவீத தமிழ்நாடு அரசு பிணையப் பத்திரங்கள் 2035 மறுவெளியீடு மற்றும் ரூ.1000 கோடி மதிப்புள்ள 7.18% சதவீத தமிழ்நாடு அரசு பிணையப் பத்திரங்கள் 2036 மறுவெளியீடு ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய முன்வந்துள்ளது. இந்தப் பிணையப் பத்திரங்கள், குறைந்தபட்சம் ரூ.10,000/-க்கும் அதன் பின்னர் ரூ.10,000/-ன் மடங்குகளிலும் ஏலம் விடப்படும். இந்திய ரிசர்வ் வங்கியின் மும்பை (கோட்டை) அலுவலகம் டிசம்பர் 09, 2025 அன்று இந்த ஏலத்தை நடத்தும்.

2. மாநில அரசின் பிணையப் பத்திரங்களை ஏலம் விடுவதற்கான பொது அறிவிக்கையின் இணைப்பு-1)ன் திருத்தியமைக்கப்பட்ட போட்டியற்ற ஏலம் கேட்பு வசதி திட்டத்தின்படி (Revised Scheme for Non-Competitive Bidding Facility) விற்பனைக்காக அறிவிக்கப்பட்டுள்ள அந்த பிணையப் பத்திரங்களில், தகுதியுள்ள தனி நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு, ஒரு ஏலக் கேட்பிற்கு உச்சவரம்பாக அறிவிக்கப்பட்ட தொகையில் ஒரு சதவீதம் என்பதற்கு உட்பட்டு 10 சதவீதம் வரை ஒதுக்கீடு செய்யப்படும். இத்திட்டத்தின் கீழ் ஒரு முதலீட்டாளர் ஒரு ஏலக் கேட்பினை மட்டுமே வங்கி அல்லது முதன்மைத் தரகர் (Primary Dealer) மூலமாக சமர்ப்பிக்கலாம்.

3. அர்ஹதையுள்ளவர்கள், ஏலக் கேட்பினை இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் (Reserve Bank of India Core Banking Solution (E-Kuber) System) மின்னணு படிவத்தில் (electronic format) டிசம்பர் 09, 2025 அன்று கீழ்க்குறிப்பிட்டுள்ள முறையில் சமர்ப்பிக்கலாம்:

அ) போட்டி ஏலக் கேட்புகள் மின்னணு வாயிலாக இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.30 மணிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஆ) போட்டியற்ற ஏலக் கேட்புகள் மின்னணு வாயிலாக இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.00 மணிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

4. ஏலம் கேட்பவர் எதிர்பார்க்கக் கூடிய விலையினை இரண்டு தசம ஸ்தானத்தில் தெரியப்படுத்த வேண்டும். ஒரு முதலீட்டாளர் வெவ்வேறு வட்டி விகிதத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட போட்டி ஏலக் கேட்பினை மின்னணு படிவத்தில் இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் (Reserve Bank of India Core Banking Solution (E-Kuber) System) சமர்ப்பிக்கலாம். இருப்பினும், ஒரு நபர் கோரும் மொத்த ஏலக் கேட்புகள் அறிவிக்கப்பட்ட தொகைக்கு மேலாக செல்லக்கூடாது.

5. ஏலத்தின் முடிவுகள் டிசம்பர் 09, 2025 அன்று இந்திய ரிசர்வ் வங்கியின் இணைய தளத்தில் வெளியிடப்படும். ஏலம் கிடைக்கப் பெற்றவர்கள், தங்களது ஏலங்களில் தெரிவிக்கப்பட்ட பிணையப் பத்திரங்களுக்கான விலையை இந்திய ரிசர்வ் வங்கி மும்பை (கோட்டை) அலுவலகத்தில் செலுத்தத்தக்க வகையிலான வங்கியாளர் காசோலை (Bankers' Cheque) அல்லது கேட்போலையை (Demand Draft) டிசம்பர் 10, 2025 அன்று வங்கிப்பணி நேரம் முடிவதற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

6. 7.09 சதவீத தமிழ்நாடு அரசு மறுவெளியீடு 2032, 7.18 சதவீத தமிழ்நாடு அரசு மறுவெளியீடு 2033 மற்றும் 7.20 சதவீத தமிழ்நாடு அரசு மறுவெளியீடு 2035 ஆகிய தமிழ்நாடு அரசு மறுவெளியீடு பிணையப் பத்திரங்களுக்கு ஏலத்தில் மேலே குறிப்பிடப்பட்ட வட்டி விகிதங்களில் 6 மாதத்திற்கு ஒரு முறை ஜூன் 03 மற்றும் டிசம்பர் 03 ஆகிய தேதிகளில் வழங்கப்படும் மற்றும் 7.18 சதவீத 2036 தமிழ்நாடு அரசு மறுவெளியீடு பிணையப் பத்திரங்களுக்கு 6 மாதத்திற்கு ஒரு முறை பிப்ரவரி 27 மற்றும் ஆகஸ்ட் 27 ஆகிய தேதிகளில் வட்டி வழங்கப்படும். இந்தப் பிணையப் பத்திரங்கள் அரசு பிணையப் பத்திரங்கள் சட்டம், 2006 (Government Securities Act, 2006) மற்றும் அரசு பிணையப் பத்திரங்கள் ஒழுங்குமுறை விதிகள், 2007 (Government Securities Regulations, 2007) ஆகியவற்றின்படி நிர்வகிக்கப்படும்.

7. இந்த பிணையப் பத்திரங்கள் மாற்றிக் கொடுக்கத் தக்க (Ready Forward Facility) தகுதியுடையதாகும்.

8. மற்ற விவரங்களுக்கு, தமிழ்நாடு அரசின் டிசம்பர் 04, 2025 நாளிட்ட பிரத்யேக அறிவிக்கை எண்.873(L)/W&M-II/2025, எண்.874(L)/W&M-II/2025, 875(L)/W&M-II/2025, மற்றும் எண். 876(L)/W&M-II/2025- ஐக் காண்க.

த. உதயச்சந்திரன்
அரசு முதன்மை செயலாளர்
நிதித் துறை, சென்னை- 09.

செ.ம.தொ.இ./ 1433 /வரைகலை/2025

தமிழ்நாடு அரசு

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரகம், சென்னை 2.

ஆணையரக எண். க்யு4/28034/2025 மின் – ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை நாள்: 01.12.2025

1) தமிழ்நாடு ஆளுநருக்காகவும் மற்றும் அவரது சார்பிலும் Printing, Making and Supply of 30 kinds of Envelopes to be inserted in Master Envelope (30 + 1) with Variable Data as per text matter, size, colour, paper quality, GSM and other technical specifications for the use of Assembly General Election 2026 கொள்முதல் செய்வதற்கு விலை நிர்ணயம் குறித்து ஒப்பந்தம் ஏற்படுத்தவும் ஒப்பந்ததாரர்கள் / அச்சகத்தார்களிடமிருந்து மின்–ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளத்தின் மூலம் https://tntenders.gov.in எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் பொது மேலாளர் அவர்களால் வரவேற்கப்படுகிறது.

2) கொள்முதல் தொடர்பான முக்கியமான தேதி மற்றும் நேரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

வ.எண்	கொள்முதல் விவரம்	வழங்கப்பட வேண்டிய இடங்கள்	மின் ஒப்பந்தப் புள்ளி வெளியிடப்படும் நாள்	முன் ஏலக் கூட்ட நாள்	மின் ஒப்பந்தப் புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள்
1.	Printing, Making and Supply of 30 kinds of Envelopes to be inserted in Master Envelope (30 + 1) with Variable Data as per text matter, size, colour, paper quality, GSM and other technical specifications for the use of Assembly General Election 2026	அரசு எழுதுபொருள் அலுவலகம், 64, இராஜாஜி சாலை, சென்னை-01.	05.12.2025	11.12.2025	05.01.2026 முற்பகல் 11.00 மணி வரை

2) மின்னணு ஒப்பந்தப்புள்ளிகளை https://tntenders.gov.in என்ற இணையதளம் வாயிலாக அனுகி பதிவேற்றம் செய்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ/6483/ஒப்பந்தப்புள்ளி/2025

பொது மேலாளர், ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்
எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரகம், சென்னை-02



